සමෘද්ධි සංවර්ධන දෙපාර්තමේන්තුව
சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம்
Department of Samurdhi Development
කාන්තා, ළමා කටයුතු හා සමාජ සවිබලගැන්වීම් අමාත්‍යාංශය
மகளிர் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு
Ministry of Women, Child Affairs and Social Empowerment

මගේ අංකය / எனது இல / My No: DSD/HO/07/SD/08/01/AP/2023
ඔබේ අංකය / உமது இல / Your No: ..........................................
දිනය / திகதி / Date: 2023.01.20

**சமுர்த்தி சுற்றறிக்கை இலக்கம் 2023/01**

சகல மாவட்டச் செயலாளர்கள் / மாவட்ட சமுர்த்தி மேலதிக பணிப்பாளர் தலைமையதிபதிகள்,
சகல மாவடட சமுர்த்தி பணிப்பாளர்கள்,
சகல பிரதேச செயலாளர்கள்,
சகல மாவட்ட சமுர்த்தி பிரதி / உதவிப் பணிப்பாளர்கள்,
சகல சமூக அபிவிருத்தி விடயப்பொறுப்பு மாவட்ட முகாமையாளர்,
சகல வங்கிச் சங்க முகாமையாளர்கள்,
சகல சமூக அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர்கள் ஆகியோருக்கு,

**<u>சமுர்த்தி சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் வேலைத்திட்டம் - 2023</u>**

2030ம் ஆண்டாகும்போது வறுமை நிலையற்ற, சுபீட்சமிகு இலங்கை ஒன்றினை உருவாக்குவதற்கு செயற்படும் முன்னோடி நிறுவனம் ஒன்றாக ஆகுதல், சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் தொலைநோக்காகும். அதற்கமைய சமுர்த்தி வேலைத்திட்டமானது வறுமை நிவாரண வேலைத்திட்டத்திற்கு மாத்திரம் வரையறுக்கப்படாமல் பொருளாதார புத்தெழுச்சியினையும் ஏற்படுத்தி உணவுப் பாதுகாப்பினை உறுதிப்படுத்திக் கொண்டு புதியபோக்கு ஒன்றுடன் இணைந்த கிராம அபிவிருத்தி வேலைத்திட்டம் ஒன்றாக மாற்றுவது மற்றும் சமூக நலன்புரி, மற்றும் நிவாரண வேலைத்திட்டங்களின் பொருட்டு பயனாளிகளைனத் தெரிவு செய்து தர்க்க ரீதியாகவும் விஞ்ஞானவியல் ரீதியான முறையயொன்றினை மேற்கொள்வதனை குறிக்கோளாக முன்வைத்து வசதி வாய்ப்புக்களற்ற நிலைக்குள்ளான மக்களை பொருளாதார, சமூக, பௌதீக, உளவியல் மற்றும் சுற்றாடல் ரீதியாக உயிர்ப்பூட்டும் பொருட்டு வினைத்திறன் மிககவும், பயனுறுதி வாய்ந்ததான வேலைத்திட்டங்களை மக்கள் பங்கேற்பினைப் பெற்றுக் கொண்டு 2023ம் ஆண்டில் நடைமுறைப்படுத்த சமூக அபிவிருத்தி மற்றும் சுற்றாடல் பிரிவு கீழுள்ள விதத்தில் வேலைத்திட்டங்களை வரிசைப்படுத்தியுள்ளது

02. சமுர்த்தி மற்றும் குறைந்த வருமானப் பெறும் மக்களின் வாழ்வாதாரத்தினை அபிவிருத்தி செய்யும் பொருட்டு அதிகப்படியான பொருளாதார வேலைத்திட்டங்களை செயற்ப்படுத்தி இருந்தாலும், நாளுக்கு நாள் விருத்தியடைகின்ற சமூகரீதியான பிரச்சினைகள் காரணமாக உத்தேச இலக்குகளை அடைந்துகொள்ள முடியாமலுள்ளது, மக்களின் சமூக ரீதியான பிரச்சினைகளை தீர்க்கும் முகமாக அதிகமான நிறுவன ரீதியான உத்தியோகத்தர்களை பிரதேச மட்டத்தில் கடமைகளில் ஈடுபடுத்தியிருந்தாலும் அவர்கள் கூட்டிணைந்த வழியில் செயற்பாடாமை காரணமாக பொதுவாக நிறுவன கிராமிய மக்கள் முகங்கொடுக்கும் பிரச்சினைகளுக்கு நிரந்தர தீர்வுகளை பெற்றுக் கொள்ள முடியாமல் போயுள்ளது.

அந்த சவால்களை வெற்றிகொள்வதற்கு 2023ம் ஆண்டில் தேசிய சமூக அபிவிருத்தி நிறுவனத்தின் உளவளத்துணை டிப்ளோமா பாடநெறியினை பயின்றுள்ள சமூக அபிவிருத்தி உதவி உத்தியோகத்தர்கள் உட்பட சகல சமூக அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் மற்றும் மக்கள் தலைவர்களின் செயற்பாட்டுப் பங்களிப்புடன், மாவட்டத்திற்கு ஒன்று என்ற வீதத்தில் 25 கிராமங்களை 2023ம் ஆண்டில் அபிவிருத்தி செய்ய எண்ணியுள்ளதுடன் அக்கிராமங்களிலிருந்து இனங காணப்படும் பொருளாதார, சமூக, பிரச்சினைகளுக்கு தீர்வுகள் கிடைக்கும் விதத்தில் அனைத்து சமூக பிரச்சினைகளுக்கு தீர்வுகள் கிடைக்கும் விதத்தில் அனைத்து சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்களும் வரிசைப்படுத்தப்படுத்தப்பட்டுள்ளது.

**01. போதைப் பொருள், மற்றும் புகையிலை தடுப்பு, வீட்டு முகாமைத்துவம் மற்றும் மகிழ்ச்சியான குடும்பங்கள் வேலைத்திட்டம்.**

தற்போது, புகைப் பொருட்கள், மதுபானங்கள் மற்றும் பல்வேறு மோசமான பொருட்களுக்கு மக்கள், இளைஞர், யுவதிகள், மற்றும் சிறார்கள் பாறியளவில் அடிமையாகி இருப்பது அதிகமாகவுள்ளது, ஆகையினால் இந்த அடிமையாகும் நிலையினை தடுக்கும் முகமாக பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் வேலைத்திடடங்களை செயற்படுத்த வேண்டியுள்ளது, விசேடமாக தெரிவு செய்யப்பட்ட மாதிரிக் கிராமங்களிலும் இந்த வேலைத்திடடங்களை நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது.

வீட்டு முகாமைத்துவம் மற்றும் மகிழ்ச்சியான குடும்பம் ஒன்றினை இதனூடாக உருவாக்கும் பொருட்டு தேவையான தலையீடுகளும், புகைத்தல் பொருட்கள், மற்றும் போதைப் பொருளிலிருந்து மக்களை விடுவித்தும் கொள்ளும் பொருட்டான வேலைத்திட்டங்களை ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபை போன்ற அரசாங்க நிறுவனங்கள், மற்றும் அரச சார்பற்ற் நிறுவனங்களின் கோட்பாட்டு மற்றும் நடைமுறை ரீதியான அறிவுள்ள வளனர்களை ஈடுபடுத்திக் கொண்டு நடைமுறைப்படுத்துவதற்கு இம்முறை திட்டமிடப்பட்டுள்ளதுடன் அதற்கான வேலைத்திட்டங்களை பிரதேச செயலகப் பிரிவு மட்டத்தில் நமைமுறைப்படுத்த திடடமிட்டுக் கொள்ள வேண்டியுள்ளது,

**02. சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழக கலாசார மற்றும் இலக்கிய வேலைத்திட்டங்கள்**

தேசத்தின் சிறார்களின் எதிர்காலத்தினை பாதுகாக்கும் நோக்கினை உறுதிப்படுத்திக் கொள்ளல் உட்பட எதிர்கால பணிகள் உள்ள உலகிற்கு பொருத்தமான விதத்தில் சிறுவர்களை உருவாக்குவதற்காக 05 வயதிற்கும் 18 வயதிற்கும் இடைக்கப்பட்ட வயதினையுடைய சிறுவர்களை கிராமிய மட்டத்தில் சமுர்த்தி கெக்குலு சிறுவர்களின் கழகங்களின் பால் ஒன்றிணைத்து அவர்களுடன் பல்வேறு செயற்பாடுகளில் ஈடுபட்டு அறிவு, ஆற்றல், திறமைகள் விருத்தி பண்புகளையுடைய சவால்களை வெற்றி கொள்ளக்க்கூடிய சிறார்களை தேசத்திற்கு உருவாக்கி கொடுப்பதே இந்த வேலைத்திட்டத்தின் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

2020/2021 மற்றும் 2022ம் ஆண்டுகளில் இடம்பெற்ற Covid தொற்றுநிலை மற்றும் நாட்டில் ஏற்பட்ட பொருளாார சிக்கல்களுக்கு மத்தியில் மேற்படி வேலைத்திட்டத்தினை செயற்படுத்த முடியாமல் போனதுடன் 2023ம் ஆண்டிலிருந்து மேற்படி வேலைத்திட்டத்தினை செயற்படுத்த தேவையான மறுசீரமைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளத் தேவையான ஆலோசணைகள் DSD/HO.07/SD/SKCS என்ற இலக்கமும் 2022.12.31ம் திகதியிடப்பட்டதுமான கடிதத்தின் மூலம் வழங்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியதுடன் இது தொடர்பில் தனியான சுற்றறிக்கை ஒன்றினை 2023 பெப்ரவரி மாதத்தில் வெளியிடுவதறகுத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது,

**03 சர்வதேச நினைவு தினங்களுடன் இணைந்ததாக சமுர்த்தி வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.**

2023ம் ஆண்டிற்குறியதாக கீழுள்ள பிரகாரம் சர்வதேச ஞாபகார்த்த தினங்களுடன் இணைந்ததாக வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த திட்டமிட்டுக்கொள்ள வேண்டியுள்ளது.

1. சர்வதேச மகளிர் தினம் (மார்ச் 08)
2. சர்வதேச புகைத்தல் மற்றும் போதை எதிர்ப்பு தினம் (மே 31)
3. சர்வதேச எழுத்தறிவு தினம் (செம்டம்பர் 08)
4. சர்வதேச சிறுவர் மற்றும் முதியோர் தினம் (ஒக்டோபர் 01)
5. சர்வதேச வறுமை ஒழிப்புத் தினம் (ஒக்டோபர் 17)

இச் சகல வேலைத்திட்டங்களையம் சமூக அபிவிருத்தித் பிரிவினால் நடைமுறைப்படுத்த உத்தேசித்துள்ளதுடன் அந்தந்த நாட்களுக்குறியதமாக தனித்தனியாக ஆலோசனைகப் பத்திரங்களும் சுற்றறிக்கைகளும் வெளியிடப்படவுள்ளது.

**04. துப்பரவேற்பாட்டு வசதிகளை வழங்கும் வேலைத்திட்டம்**

இதன் கீழ் மிகப் பொருத்தமான முன்னுரிமையினை வழங்க வேண்டிய கோரிக்கைகள் வரையறுக்கப்பட்ட அளவில் கடந்தாண்டில் கிடைக்கப்பெற்றதுடன் அக்கோரிக்கைகளுக்கு முனனுரிமையினை வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டியுள்ளது, அத்துடன் இவ்வாண்டில் செய்யப்படும் 05 மாதிரிக் கிராமங்களுக்கும் முன்னுரிமையினை வழங்கி நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டியுள்ளது,

**05. திறமை விருத்தி பயிற்சிகள் வேலைத்திட்டம்**

சமூக அபிவிருத்தி விடயத்திற்குறியதாக நடவடிக்கைகளை மேற்கொள்ளும் சகல உத்தியோகத்தர் பணிக்குழுவினதும் திறமைகளை விருத்தி செய்யும் பொருட்டான பயிற்சி வேலைத்திடடங்கள் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் தலைமைக் காரியாலத்தின் ஊடாக நடைமுறைப்படுத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது,

**06. 25 மாதிரிக் கிராமங்களை உருவாக்குதல்**

இக்கிராம வேலைத்திட்டத்தின் பொருட்டு ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் மாதிரிக் கிராமம் ஒன்றினை தெரிவு செய்து கொள்ளல் வேண்டும். இக்கிராமத்தின் பொருட்டு சமுர்த்தி வேலைத்திட்டத்தின் ஊடாக வழங்கப்படும் அனைத்து நன்மைகளையும் வழங்குவதன் ஊடாக பொருளாதார ரீதியிலும் சமூக அபிவிருத்தி வேலைத்திடட்ஙகளை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக சமூகம் என்றவகையில் வலுவூட்டப்பட்ட குடும்பங்களைக் கொண்ட ‘‘அழகான’’ கிராமம் ஒன்றினை உருவாக்குவது இதன் குறிக்கோளாகும். இங்கு உளவளத்துணை டிப்ளோமா பாடநெறியினைப் பயன்றுள்ள உத்தியோகத்தர்களின் தலையீட்டின் ஊடாக அக்கிராமத்தின் மக்களது உள விருத்தியின் பொருட்டு வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்த நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். தங்களது மாவட்டத்திலிருந்து தெரிவு செய்யப்பட்ட கிராமம் தொடர்பில் இணைப்பு III இன் பிரகாரம் தகவல்களுடன் கருத்திட்ட அறிக்கை ஒன்றுடான அபிவிருத்தி திட்டமிடல் ஒன்றினை பெப்ரவரி 30 ம் திகதிக்கு முன்னர் வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும்.

**07. உலக உணவு வேலைத்திட்டம்**

2022ம் ஆண்டின் உலக உணவு வேலைத்திட்டத்தின் கீழ் மொனராகலை, நுவரெலியா, காலி, அம்பாறை, யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் ஆகிய மாவட்டங்களில் தெரிவு செய்யப்பட்ட வங்கி வலயங்களில் குடும்ப அங்கத்தவர்கள், 4 அல்லது, 4 இற்கு மேற்பட்டோருடைய குடும்பங்களின் பொருட்டு உணவுப் பாதுகாப்புக்காக ரூபா 15000/- வழங்கும் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டது.

2023ம் ஆண்டிலும் உலக உணவு வேலைத்திட்டம் அந்த நிறுவனத்தினால் தெரிவு செய்யப்படும் மாவட்டங்களில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளத னால் அதன் பொருட்டு சமூக அபிவிருத்தி விடயப் பொறுப்பு தொடர்பில் பணியாற்றும் உத்தியோகத்தர்களின் முழுமையான தலையீட்டுடன் மேற்கொள்ள வேண்டியுள்ளது. அதன் முன்னேற்றத்தினையும் அவ்வுத்தியோகத்ர்கள் ஊடாக பெற்றுக் கொள்ள திட்டமிட்டுள்ளது,

இந்த வேலைத்திட்டத்திற்குறியதமாக தேவைப்படும் அலோசணைகள் மற்றும் வழிகாட்டல் கடிதங்கள் எதிர்காலத்தில் வழங்கப்படவுள்ளதுடன் அதன் முன்னேற்த்திற்குறிய இணைப்பும் பின்னர் வழங்கப்படும்.

**08. முதலாம் ஆண்டிலிருந்து 05 ம் ஆண்டு வரையிலான பாடசாலைச் சிறார்களுக்கான அப்பியாசப் புத்தகங்களை வழங்கும் வேலைத்திட்டம்.**

தற்போது நாட்டில் உள்ள பொருளாதார சிக்கல்களுக்கு மத்தியில் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களில் உள்ள தங்களது சிறுவர்களுக்கு கற்கை நடவடிக்கைகளை மேற்கொள்வது பெறிய சவால் ஒன்றாகவுள்ளது, ஆகையினால் 01ம் ஆண்டிலிருந்து 05ம் ஆண்டு வரையிலான சிறார்களுக்கு பாடசாலை அப்பியாசப் புத்தகங்களையும் உபகரணங்களையும் வழங்கும் வேலைத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு குறுநிதிப் பிரிவு, சமுதாய அடிப்படை அமைப்புப் பிரிவுடன் கூட்டிணைந்து நடைமுறைப்படுத்த திட்டமிட்டுள்ளதுடன் அதன் பொருட்டு தேவையான வழகாட்டல்கள் எதிர்காலத்தில் வழங்கப்படவுள்ள்து.

முதலாம் கட்டத்தின் கீழ் கிராமியப் பாடசாலைகளில் குறைந்த வருமானம் பெறும் 05ம் ஆண்டு சிறார்களுக்கு இவ்வாண்டில் முன்னுரிமையினை வழங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் குறித்த வழிகாட்டல்களின் பிரகாரம் செயற்பட மேற்சொன்ன உத்தியோகத்தர்களுக்கு ஆலோசனைகளை வழங்குதல் வேண்டும்.

**09. தூய்மையான ஒரு கரையோரம் வேலைத்திட்டம்**

கடல் மாசடைவதை குறைக்கும்" முகமாக மக்கள் பங்கேற்புடன் நிலைபேரன கடற்கறையினை பயன்படுத்தும் பொருட்டு கரையோரங்களைப் பாதுகாப்போரை (Beach caretakers) உருவாக்கும் குறிக்கோளுடன் கரையோர சுற்றாடல் திணைக்களத்துடன் இணைந்த இணக்கப்பாட்டு ஒப்பந்தத்தின் பிரகாரம் கடந்தாண்டில் இவ்வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டதுடன் 2023 ஆண்டின் பொருட்டு புதிய இணக்கப்பாட்டு ஒப்பந்தம் ஒன்றில் கையொப்பமிட்டதன் பின்னர் வேலைத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

அதன் முன்னேற்றத்தினை கடந்த வருடத்தில் வழங்கப்பட்டுள்ள் படிவத்தின் பிரகாரம் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்திற்கு அனுப்புதல் வேண்டும். புதிய ஆலோசனைகளுடன் ஆலோசனைக் கடிதம் ஒன்று ஒப்பந்தம் செய்து கொண்டதன் பின்னர் வழங்கப்படவுள்ளது, இப்பணியானது கரையோரம் சார்ந்த 14 மாவட்டங்களில் கரையோரம் சார்ந்த பயனாளிகளை தொடர்புபடுத்திக் கொண்டு அவர்களுக்கு ஏதேனும் கொடுப்பனவு ஒன்றினை சமுர்த்தி வங்கியூடாக வழங்கி நடைமுறைப்படுத்தப்படுகின்றது.

**10. முன்னேற்ற மீளாய்வுப் பட்டறையினை நடாத்துதல்**

I. ***மாவட்ட முன்னேற்ற மீளாய்வுகள்***

ஒட்டுமொத்த அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் முன்னேற்றத்தினை ஆராய்ந்து பார்க்கும் பொருட்டு விடயத்திற்குறிய உத்தியோகத்தர்களை மாவட்டச் செயலகத்திற்கு வரவழைத்து ஒரு தவணைக்கு ஒரு முன்னேற்ற மீள்ாய்வு என்ற விதம் மேற்கொள்ளல் வேண்டும். அதன் பொருட்டு கீழ் குறிப்பிடப்பட்ட உத்தியோகத்தர்களை வரவழைப்பது பொருத்தமானதாகும்.

I. மாவட்ட சமூக அபிவிருத்தி வரிடயப் பொறுப்பு முகாமையாளர் / அபிவிருத்தி உத்தியோகத்தர்ஷ
II. சமுர்த்தி லொத்தர் வேலைத்திட்டத்திற்கு பற்றில் பொறுப்பாக பணியாற்றும் முகாமைளாளர்கள்
III. வங்கிச் சங்க முகாமையாளர்கள்
IV. மாவட்டத்தின் சகல சமூக அபிவிருத்தி உதவியாளர்கள்

V. தேசிய முன்னேற்ற மீளாய்வுகள்

06 மாதத்திற்கொருமுறை சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களத்திற்கு வரவழைத்து மொத்த வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் மற்றும் முன்நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடல் (Presentation மூலம்)
அதன் பொருட்டு கீழ் குறிப்பிடப்படும் உத்தியோகத்தர்கள் வரவழைக்கப்படவுள்ளனர்.

I. மாவட்ட விடயப் பொறுப்பு முகாமையாளர்கள்,
II. சமூக அபிவிருத்தி உதவியாளர்கள்

மேற்படி அனைத்து வேலைத்திட்டங்களையும் நடைமுறைத்தும் போது உரிய பொது நிர்வாக சுற்றறிகைகள் மற்றும் நிதிப் பிரமாணங்களுக்கேற்ப நடவடிக்கைளை மேற்கொள்ளல் வேண்டும் என மேலும் அறியத்தருகின்றேன். திறைசேரி நிதி ஒதுக்கீட்டின் கீழ் மேற்கொள்ளப்படும் வேலைத்திட்டங்களின் முன்னேற்றத்தினை ஒவ்வொரு மாதமும் 05ம் திகதிக்கு முன்னர் பிரதேச செயலக பிரிவு மட்டத்தில் பெற்றுக் கொண்டு தயாரித்து மாவட்ட அறிக்கையினை ஒவ்வொரு மாதமும் 10ம் திகதிக்கு முன்னர் சமூக அபிவிருத்திப் பிரிவுக்கு வழங்குதல் வேண்டும். (இணைப்பு I)

சமுதாய அடிப்படை மற்றும் பிரதேச அமைப்புக்களில் நிதியங்களின் நிதி ஒதுக்கீட்டினை பெற்றுக் கொண்டு நடைமுறைப்படுத்தும் பொருட்டு அச் செயற்பாட்டுத் திட்டமிடலில் உள்ளடங்கியுள்ள சமூக அபிவிருத்தி வேலைத்திட்டங்களின் முன்னேற்றத்தினையும் மேற்சொன்ன தினத்திலேயே வழங்க நடவடிக்கைகளை மேற்கொள்ளல் வேண்டும். (இணைப்பு II)

சமூக அபிவிருத்தி வேலைத்திட்டத்திட்டத்திற்குறிய முன்னேற்றங்களை துரிதமாக வழங்க socialdev@gmail.com என்ற மின்னஞ்சல் முகவரி அல்லது 0112889046 மற்றும் 011 2876601 ஆகிய இலக்கங்கள் ஊடாக சமூக அபிவிருத்திப் பிரிவினை தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியும் என்பதுடன் அதனை மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர், பிரதி அல்லது உதவிப் பணிப்பாளரால் உறுதிபடுத்தப்படல் வேண்டும்.

இது தொடர்பில் மேலதிக விபரங்களுக்கு 011 2889046 மற்றும் 011 2876601 ஆகிய இலக்கங்கள் ஊடாக சமூக அபிவிருத்திப் பிரிவினை தொடர்பு கொண்டு பெற்றுக் கொள்ள முடியம்.

ஆர்.பீ.பி. திலக்கசிறி
பணப்பாளர் தலைமையதிபதி

பிரதிகள்

01. செயலாளர் - மகளிர், சிறுவர் விவகாரம் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு - த.கூ.க. பொருட்டு
02. கணக்காய்வு அத்தியட்சகர் - அரச கணக்காய்வுப் பிரிவு - த.கூ.க. பொருட்டு
03. பிரதம கணக்காளர் - சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களம் - த.கூ.க. பொருட்டு
04. பிரதான உள்ளகக் கணக்காய்வாளர் - சமுர்த்தி அபிவிருத்தித் திணைக்களம் - த.கூ.க. பொருட்டு
05. சகல பிரிவுத் தலைவர்கள் - சமுர்த்தி அபிவிருத்தித். திணைக்களம் - த.கூ. க. பொருட்டு

**Translated By: - M.M.M. Jawhar (Translator)**

இணைப்பு 01

## திறைசேரி நிதி ஒதுக்கீடு

## சமூக அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் முன்னேற்றம் ................. ம் திகதியில்

**மாவட்டத்தின் பெயர் :-**

| தொடர் இலக்கம் | பிரதேச செயலகப் பிரிவு | 1 | | | 2 | | | 3 | | | 4 | | | 5 | | | 6 | | | 7 | | | 8 | | | 9 | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | நன்மைகள்“ கிடைக்கப்பெற்ற எண்ணிக்கை | செலவாகிய தொகை ரூ.மில்லி | வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | நன்மைகள்“ கிடைக்கப்பெற்ற எண்ணிக்கை | செலவாகிய தொகை ரூ.மில்லி | வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | நன்மைகள்“ கிடைக்கப்பெற்ற எண்ணிக்கை | செலவாகிய தொகை ரூ.மில்லி | வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | நன்மைகள்“ கிடைக்கப்பெற்ற எண்ணிக்கை | செலவாகிய தொகை ரூ.மில்லி | வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | நன்மைகள்“ கிடைக்கப்பெற்ற எண்ணிக்கை | செலவாகிய தொகை ரூ.மில்லி | வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | நன்மைகள்“ கிடைக்கப்பெற்ற எண்ணிக்கை | செலவாகிய தொகை ரூ.மில்லி | வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | நன்மைகள்“ கிடைக்கப்பெற்ற எண்ணிக்கை | செலவாகிய தொகை ரூ.மில்லி | வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | நன்மைகள்“ கிடைக்கப்பெற்ற எண்ணிக்கை | செலவாகிய தொகை ரூ.மில்லி | வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | நன்மைகள்“ கிடைக்கப்பெற்ற எண்ணிக்கை | செலவாகிய தொகை ரூ.மில்லி |
| 1 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 2 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 3 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 4 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 5 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 6 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 7 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| மொத்தக் கூட்டுத் தொகை | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |

1 போதைப் பொருள், புகையிலை, தடுப்பு வீட்டுமுகாமைத்துவம் மற்றும் மகிழ்ச்சியான குடும்ப வெலைத்திட்டம்
2 சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழக கலாசார மற்றும் இலக்கிய வேலைத்திட்டம்
3 சர்வதேச ஞபகார்த்த தினங்களுடன் இணைந்ததாக சமுர்த்தி வேலைத்திட்டங்களை செயற்படுத்துதல்
4 துப்ரவேற்பாட்டு வசதிகளை வழங்கும் வேலைத்திட்டம்
5 திறன் அபிவிருத்தி பயிற்சி வேலைத்திட்டம்
6 25 மாதிரிக் கிராமங்களை உருவாக்குதல்
7 முதலாம் ஆண்டிலிருந்து 05ம் ஆண்டு வரையிலான பாடசாலைச் சிறார்களுக்கு அப்பியாசப் புத்தகங்களை வழங்கும்வேலைத்திட்டம்
8 முன்னேற்ற மீளாய்வுப் பட்டறையினை நடாத்துதல்

குறிப்பு * சர்வதேச ஞாபகாரத்த தின வேலைத்திட்டங்களின் முன்னேற்றத்தினை தனியாகக் குறிப்பிடவும்

| | | |
|---|---|---|
| ............................... | ............................. | ................................. |
| தயாரித்தவர் | சிபாரிசு செய்தவர் | அங்கீகரித்தவர் |

**இணைப்பு 02**

## திறைசேரியல்லாத நிதி ஒதுக்கீடுகள் மற்றும் பிற நிதியங்கள்
## சமூக அபிவிருத்தி வேலைத்திட்டத்தின் முன்னேற்றம்................. திகதியல்

**மாவட்டத்தின் பெயர் :-:-**

| தொடர் இலக்கம் | பிரதேச செயலகப் பிரிவு | | | | 2 | | | 3 | | | 4 | | | 5 | | | 6 | | | 7 | | | 8 | | | மொத்தம் | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | நனமைகள்" கிடைக்கப்பெற்ற எண்ணிக்கை | செலவாகிய தொகை ரூ.மில்லி | வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | நனமைகள்" கிடைக்கப்பெற்ற எண்ணிக்கை | செலவாகிய தொகை ரூ.மில்லி | வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | நனமைகள்" கிடைக்கப்பெற்ற எண்ணிக்கை | செலவாகிய தொகை ரூ.மில்லி | வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | நனமைகள்" கிடைக்கப்பெற்ற எண்ணிக்கை | செலவாகிய தொகை ரூ.மில்லி | வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | நனமைகள்" கிடைக்கப்பெற்ற எண்ணிக்கை | செலவாகிய தொகை ரூ.மில்லி | வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | நனமைகள்" கிடைக்கப்பெற்ற எண்ணிக்கை | செலவாகிய தொகை ரூ.மில்லி | வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | நனமைகள்" கிடைக்கப்பெற்ற எண்ணிக்கை | செலவாகிய தொகை ரூ.மில்லி | வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | நனமைகள்" கிடைக்கப்பெற்ற எண்ணிக்கை | செலவாகிய தொகை ரூ.மில்லி | வேலைத்திட்டங்களின் எண்ணிக்கை | நன்மைகள்" கிடைக்கப்பெற்ற எண்ணிக்கை | செலவாகிய தொகை ரூ.மில்லி |
| 1 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 2 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 3 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 4 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 5 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 6 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| 7 | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |
| முழு மொத்தம் | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | | |

1 போதைப் பொருள், புகையிலை, தடுப்பு வீட்டுமுகாமைத்துவம் மற்றும் மகிழ்ச்சியான குடும்ப வெலைத்திட்டம்
2 சமுர்த்தி கெக்குலு சிறுவர் கழக கலாசார மற்றும் இலக்கிய வேலைத்திட்டம்
3 சர்வதேச ஞபகார்த்த தினங்களுடன் இணைந்ததாக சமுர்த்தி வேலைத்திட்டங்களை செயற்படுத்துதல்
4 துப்பரவேற்பாட்டு வசதிகளை வழங்கும் வேலைத்திட்டம்
5 திறன் அபிவிருத்தி பயிற்சி வேலைத்திட்டம்
6 25 மாதிரிக் கிராமங்களை உருவாக்குதல்
7 முதலாம் ஆண்டிலிருந்து 05ம் ஆண்டு வரையிலான பாடசாலைச் சிறார்களுக்கு அப்பியாசப் புத்தகங்களை வழங்கும் வேலைத்திட்டம்
8 முன்னேற்ற மீளாய்வுப் பட்டறையினை நடாத்துதல்

குறிப்பு * சர்வதேச ஞாபகாரத்த தின வேலைத்திட்டங்களின் முன்னேற்றத்தினை தனியாகக் குறிப்பிடவும்

| | | |
|---|---|---|
| ............................... | ............................. | ................................. |
| தயாரித்தவர் | சிபாரிசு செய்தவர் | அங்கீகரித்தவர் |

**இணைப்பு III**

## "நூற்றாண்டுக்கான ஒரு முயற்சி" என்றநோக்கினை முன்வைத்து மாதிரிக் கிராம வேலைத்திட்டம்

## ……………………………………. மாவட்டம்

பொருளாதார மற்றும் சமூக ரீதியாக வலவூட்டப்பட்ட "அழகான ஓர் கிராமத்தினை" கட்டியெழுப்புதல்

1. தெரிவு செய்யப்பட்ட கிராமம் சொந்தமான மாவட்டம்: …………………………………………………….
2. தெரிவு செய்யப்பட்ட கிராமம் சொந்தமான பிரதேச செயலகப் பிரிவின் பெயர் :- ………………………..
3. தெரிவு செய்ப்பட்ட கிராமத்திற்குச் சொந்தமான கிராம உத்தியோகத்தரின் பிரிவின் எண்ணிக்கை ……………………………………
4. நகரத்திலிருந்து கிராமத்திற்கான தூரத்தின் அளவு :- ……………………………………………………
5. சமுர்த்திப் பயனாளிக் குடும்பங்களின் எண்ணிக்கை :- …………………………………………………….
6. மாற்றுத்திறனாளிகள் உள்ள குடும்பங்களின் எண்ணிக்கை :- …………………………………………..
7. வீடற்ற குடும்பங்களின் எண்ணிக்கை:- ……………………………………………………………..…
8. பாடசாலை செல்லும் பிள்ளைகள் தொடர்பான விபரங்கள் :-(எண்ணிக்கையினைக் குறிப்பிடவும்) ………………………………………………………….

   i. முதலாம் ஆண்டு முதல் 5ம் ஆண்டுவரை:- ☐ iv. க.பொ.த. உ.த :- ☐
   ii. 6ம் ஆண்டு முதல் 10 ம் ஆண்டுவரை :- ☐ v. பட்டதாரி :- ☐
   iii. க.பொ.த சா.த :- ☐ vi. உயர்தரம் தேறியவர் :- ☐

9. வலுவூட்டக்கூடிய குடும்பங்களின் எண்ணிக்கை:- ……………………………………………..............
10. பாடசாலையை விட்டுச் சென்றவர்களின் எண்ணிக்கை :- ………………………………………………..

    i. பெண்கள் :- ☐ ii. ஆண்கள்:- ☐

11. போதைப்பொருட்களுக்கு அடிமையாகியுள்ள குடும்பங்களின் எண்ணிக்கை :- …………………………….
12. துப்புரவேற்பாட்டு வசதிகள் இல்லாத குடும்பங்களின் எண்ணிக்கை :- ………………………………………..
13. மாதிரிக் கிராமத்தின் பல்வேறு ஆற்றல்களையுடைய ஆட்களை அணிதிரட்டிக் குறிப்பிடுதல்

    உதாரணம்:- தச்சு ☐ மேசன் ☐ போன்றவைகள்.